1989 மார்ச் 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை, நானே என்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு ஏன் இவ்வளவு நேரம் பாதுகாப்புக் கோரிப் பேசினார்கள் என்று தெரியவில்லை.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு). எனக்கு உங்களை மாதிரி நேரம் ஆகாது. தலைவர் அவர்களே, ஏற்கனவே கன்னியாகுமரியில் நடந்த ஒரு விஷயமாக நான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து அது 3 தடவை தள்ளி வைக்கப்பட்டது. இன்றைக்கும் அந்தத் தீர்மானம் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சில மணித்துளிகளிலே அவையிலே எடுக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பிரச்சினையைப் பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை முழுமையாகப் பேச முடியாமல் பாதியிலேயே இடைமறிக்கப்பட்டால் ஒரு பகுதிதான் பேசியது போல் வரும்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இது குறித்து நீங்கள் அறையிலேயே தெரிவித்திருந்தால் அது என்ன வடிவம் என்று அப்போதே சொல்லியிருப்பேன். அருள் கூர்ந்து அமருங்கள். நான் இசைவு தந்தவர்கள் பேசட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பாயின்ட் ஆர்ப் ஆர்டர். நான் ஏற்கெனவே எழுப்பியது ஒட்டிய பிரச்சினை இது. புதிதான பிரச்சினை அல்ல. இங்கே சட்டமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி நடுநிலைப் பத்திரிகையாக இருக்கிற தினமணி, அது தி. மு. க. பத்திரிகையோ அல்லது அ. தி. மு. க. பத்திரிகையோ அல்ல ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு நீங்கள் என்னிடத்திலே இசைவே வாங்கவில்லை. இசைவே வாங்காமல் எந்தப் பத்திரிகைக் குறிப்பையும் படிக்கக் கூடாது என்பது உங்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன்.